[4th August 1965

திரு. செ. மாதவன்: புதுக்கோட்டையில் உள்ள சிறையில் சில சமயங்களில் அடைத்து வைக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில சமயங்களில் அடைத்து வைக்கப்படுகிற அந்தக் கொட்டகை எதனால் வேயப்பட்டிருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன் : அது கால்வனைஸ்டு ஷீட்ஸ் ஆல் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் அமைச்சர் அவர்கள் கால்வனைஸ்டு ஷெட் என்று சொல்கிறார்கள். அப்படியானால் சிமிண்ட் தகடா, செப்புத் தகடா, இரும்புத் தகடா? இரும்புத் தகட்டினால் தான் அமைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் திரு. மாதவன் அவர்கள் கேட்ட சமயத்தில் கால்வனைஸ்டு ஷெட் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. அதை திருத்திக் கொள்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : கால்வனைஸ்டு ஷெட்தான் போடப்பட்டிருக்கிறது. டின் ஷெட் போடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். டின் ஷெட் போடப்படவில்லையென்று சொன்னேன். டின் ஷெட்டுக்கும், கால்வனைஸ்டு ஷெட்டுக்கும் வித்தியாசம் உண்டு.

* 78 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடைகளினால் சுகாதாரக்கேடு அடைவது பற்றியும், தண்ணீர் வசதி இல்லாததைப்பற்றியும் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீ எஸ். மாதவன், எம்.எல்.ஏ., அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டில் கூறியுள்ள கருத்துரைகளைக் குறித்து தமிழ்நாடு சிறைச்சாலைகள் தலைவரைக் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அக் கருத்துரைகள் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதியது.

9-00 உ.ப. திரு. செ. மாதவன் : இப்போது சிறைக் கைதிகளுக்கு யூனிபாரமாக ஒரு பாடி, ஒரு டிரவுசர் கொடுக்கிறார்கள். சிறைக் கைதிகள் நாள் முழுவதும் அந்த ஒரே உடையோடு இருக்க வேண்டியிருக்கிறது. கேரளத்தில் சுதந்திரத்திற்குப் பின்னால் இதைப் பற்றிப் பரிசீலித்து நம்முடைய நாட்டுப் பண்பாட்டுப் படி வேஷ்டி, சட்டை கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள். அதே போன்ற முடிவை நம்முடைய மாநிலத்திலும் எடுக்க உத்தேசம் உண்டா?

4th August 1965]

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்துதான் இப்போது இருக்கிற முறையை மாற்றுவதற்கில்லை என்று சொன்னேன்.

திரு. முனு. ஆதி: இந்தப் புகாரை அமைச்சர் அவர்கள் புகார் அனுப்பிய சட்ட மன்ற உறுப்பினர் அவர்களையும் வைத்துக் கொண்டு விசாரித்தார்களா? அந்த முறையில் பரிசீலனை செய்தார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : அவர் அனுப்பியதைத் தலைமை அதிகாரிக்கு அனுப்பி அங்கிருந்து வந்த பதிலை வைத்துக் கொண்டுதான் சொன்னேன்.

திரு. சா. கணேசன் : சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடை மிகவும் குட்டையாகவும், போதுமானதாக இல்லாததாகவும் இருப்பதால் அதை மாற்ற வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் வேட்டி கொடுத்தால் ஆபத்தான நிலைமைகள் ஏற்பட வழி இருக்கிறது. அவர்கள் சில சமயங்களில் தூக்குப் போட்டுக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, இப்போது கொடுக்கப்படுகிற உடையையே கொஞ்சம் நீளமாக, போதியதாக கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது 'சி' வகுப்புக் கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிற சட்டை அளவுகள் போதுமானதாக இருக்கின்றன என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. ஆ. கு. சுப்பையா : சிறையில் இருக்கக்கூடிய கைதிகளுக்குத் தொப்பி கொடுக்கப்படுகிறது. அந்தத் தொப்பியை வைத்தால் குரங்கு மாதிரி இருப்பதால் அந்தத் தொப்பியை எடுத்து விட அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. கோ. பூவராகன் : சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும் என்ற வகையில் தொப்பி வைத்துக் கொள்வது அவசியம் என்றுதான் அந்த முறையை வைத்திருக்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : இந்த புதுக்கோட்டை ஜெயிலில் தண்ணீர் பஞ்சம் இருப்பது பற்றியும் புகார் செய்யப்பட்டது. அங்கு ஒரே ஒரு குழாய்தான் இருக்கிறது. அந்தக் குழாயில் தண்ணீர் நின்று விட்டால் ஜெயிலுக்குத் தண்ணீரைக் காசு கொடுத்து வெளியிலிருந்து வாங்குகிறார்கள். குளிப்பதற்கு வேண்டிய தண்ணீருக்கும் மோட்டார் பம்ப் செட் வசதி இல்லை. கைதிகள் கிணற்றிலிருந்து இறைத்து ஊற்றுவது ஓரளவுக்குத் தான் பயன்படுகிறது. அங்கு ஒரு பம்ப் செட் வைக்கவும், குடி தண்ணீருக்கு அதிகப்படியான குழாய்கள் வைக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : என்னிடம் இருக்கும் தகவல் பிரகாரம் குடிதண்ணீருக்காக நகராட்சியிலிருந்து மூன்று குழாய்கள் வைத்திருக்கிறார்கள். வேனிற் காலங்களில் தண்ணீர்த்

தட்டுப்பாடு இருக்கும்போது லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து சப்ளை செய்கிறார்கள். குளிப்பதற்கு மூன்று கிணறுகள் இருப்ப தாகத் தகவல் இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : சிறைகளிலே நல்ல வசதி களைச் செய்து வைத்திருக்கும் காரணத்தினால்தான் நாட்டிலே அதிகமாகக் குற்றங்கள் நடைபெறுகின்றன என்று பொது மக்கள் பரவலாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இருக் கின்ற வசதிகளை இன்னும் சற்றுக் குறைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது இருக்கின்ற நிலையை உயர்த்துவதற்கோ, குறைப்பதற்கோ உத்தேசம் இல்லை.

திரு. எஸ். மணி : நான் சிறையிலே இருந்தபோது கோட்டு, மேல் சட்டைக் கொடுத்திருந்தார்கள். அதைப் போட்டுக் கொண்டால் ஆள் யாரென்றே தெரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் பெரிதாக இருந்தது. ஆகவே, ஆளுக்குத் தகுந்த மாதிரி உடைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : சிறையிலே உள்ள உடைகளிலே அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி உடைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சரியாக இல்லையென்றால், நீளமாக இருக்கிறது என்றால் மாற்று உடை வாங்கிக் கொள்ளலாம்.

திரு. ஆ. தங்கவேலு : மத்திய சிறைச்சாலையிலே உள்ள கைதி களுக்கு முன்னால் உபயோகப்படுத்தப்பட்ட பழைய உடைகளை, அழுக்கடைந்த உடைகளை அளிப்பதன் காரணமாக சுகாதாரக் கேடான நிலைமைகள் ஏற்படுவதால் நல்ல உடைகளை அளிப்ப தற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : சுகாதாரக் கேடான உடுப்புகளை யாருக்கும் கொடுப்பதில்லை. பழைய உடுப்புகளை நன்றாகச் சுத்தம் செய்து மறுபடியும் உபயோகப்படுத்துகிறார்கள்.

திரு. செ. மாதவன் : 'சி' வகுப்புக் கைதிகளுக்கு இரண்டு செட் உடைதான் கொடுக்கிறார்கள். அதில் ஒரு பனியன், ஒரு டிரவுசர் இருக்கிறது. நாள் பூராவும் அதைப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதை மாற்றிக்கொண்டு குளிப்பதற்கும் வசதி இல்லை. ஆகவே, இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சிறைக்கு நேரிலே சென்று பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : நேரில் பார்த்து விட்டு வந்து தான் பதில் சொல்லுகிறேன்.

இளம் குற்றவாளிகள்

*79 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் செய்தி விளம் பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சையில் இளம் குற்றவாளிகளுக்கு மத்திய சிறை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?